





கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (1.6.2025) மதுரை, கலைஞர் திடலில் திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, கழக முதன்மை செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர்கள் –ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ. இராசா, அந்தியூர் செல்வராஜ், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மாவட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்களோடு மக்களாக நடந்து சென்றது கண்கொள்ளாக் காட்சி!

# மாமதுரையில் நடைபெற்ற மகத்தான ‘ரோடு ஷோ’!

மதுரை, ஜூன் 2-

மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் பங்கேற்று சிறப்புரையாற்ற கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று - மதுரை மாநகருக்கு சென்றிருந்தார்.

மதுரையில் சற்றொப்ப 22கி.மீ. தூரத்திற்கு மக்கள் வெள்ளம் சாலையின் இருபுறமும் சூழ கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாகனத்திலிருந்தும் நடை பயணமாகவும் சுமார் 4 மணி நேரம் நடத்திய ‘ரோடு ஷோ’ கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

மதுரையில் அவனியாபுரத்தில் புறப்பட்டு வில்லாபுரம், ஜெயவிலாஸ் பணிமனை வழியாக ஜெய்ஹிந் புரம், சோலை அழகு புரம், ஜீவா நகர், பழங்காநத்தம், வழியாக மதுரை கீழ வாசல், பெத்தானியாபுரம் வழியாக ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் அமைந்துள்ள திருமலை நாயக்கர் சிலை வரை சென்று பின்னர் அங்கிருந்து மதுரை புது ஜெயில் ரோட்டில் அமைந்துள்ள மதுரா கோட்ஸ் முன்பாக அமைந்துள்ள மதுரை முத்து சிலை இருக்கும் இடம் வரை சுமார் 22 கி.மீ. தூரம் எங்குப் பார்த்தாலும் மக்கள், மக்கள் என்று சொல்லும் வண்ணம் லட்சக்கணக்கானோர் கழகக் கொடிகளை கையிலேந்தி கழகத் தலைவரை வரவேற்றது இது வரை வேறு எங்கும் காணாத அளவிற்கு இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த ‘ரோடு ஷோ’ குறித்து தொலைக்காட்சிகள் - தமிழ் பத்திரிகைகள் மட்டுமின்றி ஆங்கில பத்திரிகைகளும், மிகவும் எழுச்சியாக எழுதி சிறப்புக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளன.

## ஆங்கில ஏடுகள் பாராட்டு!

**‘சண்டே டைம்ஸ்’**



SUNDAY TIMES OF INDIA

6 TIMES REGION

Four-hour Roadshow Brings Southern City To A Standstill

Stalin takes to Madurai streets to make a point

சென்னையிலிருந்து மதுரை வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை 5.30 மணியளவில் பெருங்குடியில் தனது ‘ரோடு ஷோ’வை தொடங்கினார். ஆயிரக்கணக்கான மக்கள் சாலையின் இருபுறமும் திரண்டு நின்று தி.மு.க. கொடிகளை ஏந்தியும் கொள்கைகளை முழக்க மிட்டும் அவரை வரவேற்றனர். பல இடங்களில் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாகனத்திலிருந்து கீழே இறங்கி மக்களோடு மக்களாகச் சென்று அவர்கள் வாழ்த்துக்களை பெற்றதோடு அங்கிருந்து சிறுவர் சிறுமிகளோடு அளவளாவினார். அவனியாபுரத்தில் குறிப்பாக பராசக்தி நகரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர், தந்தை பெரியார், பாரதியார் மற்றும் பாரத மாதா உடை அணிந்து சிறுவர்கள் வரவேற்றனர். அவர்களை கண்டவுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அருகே சென்று அவர்களோடு நெருங்கி பேசினார்.

கலைஞரை போல் உடை அணிந்த சிறுவன் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு முத்தமிட்டதையடுத்து உடனடியாக அவரும் ‘ப்ளையிங் கிஸ்’ (Flying Kiss) கொடுத்தபோது அங்கே பலரும் உரத்த குரல் எழுப்பினர்.

இந்த இடைப்பட்ட தூரத்தை கடந்து செல்ல அவருக்கு வாகனம் ஏற்பாடு செய்திருந்த போதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல இடங்களில் கீழிறங்கி மக்களோடு மக்களாக நடந்து சென்றார்.

**‘தி சண்டே எக்ஸ்பிரஸ்’**



THE NEW SUNDAY EXPRESS

Stalin's 20-km roadshow sets tone for DMK's Madurai meet

பெருங்குடி அம்பேத்கர் சிலையிலிருந்து தங்கும் விடுதியான சர்க்யூட் அவுஸ் வரை சுமார் 20 கி.மீ. தூரமும் கருப்பு சிவப்பு வண்ணத்துடன் கூடிய தி.மு.க. கொடியேந்தி ஆயிரக்கணக்கானோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வரவேற்றனர். எங்குப் பார்த்தாலும் தி.மு.க. கொடியோடு அலங்கரிக்கப்பட்ட பலூன்களை அவர்கள் கையிலேந்தி அவரை இன்முகத்துடன் வரவேற்றனர். மிக நீண்ட நான்கு மணி நேரம் நடைபெற்ற இந்த ‘ரோடு ஷோ’வில் பல இடங்களில் வேனிலிருந்து கீழிறங்கி அங்கிருந்த பொதுமக்கள் மற்றும் சிறுவர்களுடன் பேசி அவர்களோடு அவர்களின் விருப்பத்திற்கேற்ப முகமலர்ச்சியோடு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

அவனியாபுரம், வில்லாபுரம், ஜெய்ஹிந்த் புரம், டி.வி.எஸ். நகர், பழங்காநத்தம், ஆரப்பாளையம், ஜெயில்ரோடு, சிம்மக்கல், உள்ளிட்ட இடங்களில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதிலும் சாலையின் இருபுறமும் உள்ள மக்களை பார்த்த மாத்திரத்தில் வேனிலிருந்து முதல்வர் ஸ்டாலின் அவர்கள் கீழிறங்கி பொது மக்களிடம் குறிப்பாக மகளிரிடமும் குழந்தை களிடமும் கைகுலுக்கி அவர்கள் அளித்த மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.

**‘தி ஹிந்து’**

மதுரையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஏறத்தாழ 20 கி.மீ. ‘ரோடு ஷோ’ நடத்திய போது ஏராளமானவர்கள் குறிப்பாக பெண்களும், சிறுவர்களும் இருபுறமும் இருந்து தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தினர். சென்ற இடங்களில் எல்லாம் அங்கே முகமலர்ச்சியோடு காத்துக் கொண்டிருந்தவர்களோடு உற்சாகமாக உரையாடினார். அவர்களோடு செல்ஃபி எடுத்துக் கொண்டார்.

பல இடங்களில் அணி அணியாக வரிசையில் நின்று கொண்டிருந்த மகளிர்,



THE HINDU ON SUNDAY

Large crowd gathers to greet CM at roadshow in Madurai

‘கலைஞர் உரிமை மகளிர் திட்டத்தின்’ கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்து வருவதற்கு தங்களது நன்றியை அப்போது முதல்வருக்கு அவர்கள் தெரிவித்தனர்.

2026 சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் துவங்கிவிட்டதாகவே இந்த ‘ரோடு ஷோ’ அமைந்துள்ளது என்று தி.மு.க.வினர் தெரிவித்தனர். இந்த ‘ரோடு ஷோ’வின்போது மூத்தவர்களிடம் - ஆண்கள், பெண்கள் கோரிக்கை மனுக்களை அவர் பெற்றுக் கொண்டார். கைபேசியுடன் காத்துக் கொண்டிருந்த சிறுவர்களோடு அவர் செல்ஃபியும் எடுத்துக் கொண்டார்.

வில்லாபுரத்தைச் சேர்ந்த 2 குழந்தைகளின் தாயான கமலா தேவி இதுபற்றி குறிப்பிடுகையில் “நீங்கள் நன்றாக படிக்க வேண்டும், உங்கள் உயர் கல்விக்கும் ஆதரவளிக்கிறேன்” என்று முதல்வர் அங்கிருந்தவர்களிடம் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

### நெல்லை மத்திய மாவட்டத்தில்

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

### மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு

நெல்லை, ஜூன் 2-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நாளை 3 ம்தேதி மத்திய, மாநகர,கழக நிர்வாகிகள், மூத்த நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் ஆகியோரை ஒருங்கிணைத்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து,ஏழை,எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது.

நமது கழக குடும்பத்தின் தலைவர்,அறிவும்,அதிகாரமும் ஒரு பகுதி மக்களுக்கே என்ற நிலையை மாற்றி, விளிம்பு நிலை மக்களின் வாழ்வு நிலை உயர்ந்திட, அணு அணுவாய் சிந்தித்து, அடுக்கடுக்காய் திட்டங்கள், சட்டங்கள் தீட்டி, அறிவாலும் ஆற்றலாலும் அகிலம் முழுவதும் தமிழர்கள் ஆதிக்கம் செலுத்திடும் வகையில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்த நவீன தமிழகத்தின் சிற்பி, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, நாளை (3 ம்தேதி செவ்வாய் கிழமை) நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட வட்ட கழக செயலாளர்கள்,தங்களது வார்டுகளிலும், கிளை கழகச் செயலாளர்கள்,தங்களது கிளைகளிலும்,தங்கள் பகுதியில் உள்ள மூத்த நிர்வாகி கள்,கழக முன்னோடிகள் அனைவரையும் ஒருங்கிணைத்து,தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி பிறந்த நாளை சிறப்பாக கொண்டாட வேண்டும்.

மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட,கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள்,பாக முகவர்கள்,கழக உடன்பிறப்புகள் அனைவரும் தங்கள் பகுதி யில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

மதுரை, ஜூன் 2-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நூற்றாண்டு நாயகர்-ஓய்வில்லா உழைத்த உழைப்பாளி சாமானிய மக்கள்பயன்பெரும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திநாடுபோற்றுகின்ற ஒப்பற்ற தலைவர்முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஜூன்-3 செவ்வாய் கிழமைஅன்று காலை 8 மணிக்கு சிம்மக்கல்ரவுண்டானா வடக்கு வெளி வீதியில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப் படவுள்ளது.

இந்நிகழ்வில்மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிகழக,வட்டகழகசெயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்றஉறுப்பினர்கள், கழகஉடன்பிறப்புகள்அனைவரும் தவறாது கலந்து



கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் பிறந்தநாள் விழாவை சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில் பகுதி கழகங்கள், வட்ட கழகங்கள் தோறும்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்திருவுருவபடத்திற்குமாலை அணிவித்து, இனிப்புகள் வழங்கியும், மாபெரும் அன்னதானங்கள் வழங்கியும், முதியோர் இல்லங்கள் காப்பகங்களில் அறுசுவை உணவு வழங்கியும், ஏழை எளிய சாமானியர்கள்பயன் படுகின்ற வகையில் நலத் திட்டங்களைவழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: காலை 8 மணி அளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைமுன்பு 1000நபர்களுக்குகாலை உணவு வழங்கப்படும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.